JUNIOR
I Batch.

# 465

## ஆகஸ்ட் 2017

நேரம்- பத்து நிமிடங்கள்
(பெரும மதிப்பெண்கள்:100)

*கீழ்கண்டவற்றை இரட்டை வரி இடைவெளியில், பத்து டிகிரி இடது ஓரம் விட்டு, தட்டச்சு செய்க. (பிழையின்றியும், அழகுறவும் தட்டச்சு செய்வதில் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும்):-*

பெண்கள் கடைகளில் பார்க்கும் தட்டு, முட்டு சாமான்களை வாங்கி பரண்களில் தூங்க விடக் கூடாது. புழங்குவதற்கு என்ன அவசியமோ அவை மட்டும் வீட்டில் இருந்தால் போதுமானது. வீட்டில் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கேற்ப உணவு தயாரிக்க வேண்டும். அளவுக்கு அதிகமாகச் சமைத்து குப்பையில் போடுவதும், குளிர்சாதனப் பெட்டியில் வைத்து இரண்டு மூன்று நாட்களுக்கு உபயோகிப்பதும் தவறான பழக்கங்களாகும். குழந்தைகளுக்கு சாப்பாடு கொடுக்கும் பொழுது வயிறு முட்ட, முட்ட கொடுக்கக் கூடாது. எவ்வளவு சுவையான உணவாக இருந்தாலும் இரைப்பையில் அரை பாகம் சாப்பாடு, கால் பாகம் தண்ணீர், கால் பாகம் காலியாக வைத்திருப்பதால் உடல் ஆரோக்கியம் மேம்படும். அடிக்கடி வெளியில் வாங்கிச் சாப்பிடுவதற்குப் பதிலாக வீட்டிலேயே உணவு தயாரித்துக் கொடுப்பதால் பணம் மிச்சப்படுவதுடன் குடும்ப ஆரோக்கியத்தையும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

உடை விஷயத்திலும் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டும். குழந்தைகளுக்கான உடைகளை அலமாரி முழுக்க அடுக்கி வைத்து அவர்கள் ஓரிரு முறை பயன்படுத்தியபின் அல்லது பயன்படுத்தாமலேயே உடை சிறியதாகி விட்டதென்று கழிக்கும் நிலை நிறைய வீடுகளில் உள்ளது. நமக்கு வசதி இருந்தாலும் ஆடம்பரமான விலை உயர்ந்த உடைகளை அவர்கள் கேட்கிறார்கள் என்பதற்காக வாங்கித் தரக் கூடாது. எடுத்ததற்கெல்லாம் இருசக்கர வாகனத்தைப் பயன்படுத்தக் கூடாது. குழந்தைகள் படிக்கும் பள்ளியோ, கடை வீதிகளோ அருகில் இருக்கும்பொழுது அவர்களையும் கூட்டிக் கொண்டு நடந்தே செல்ல வேண்டும். இதனால் எரிபொருள் சேமிப்புடன் நடக்கவே சலித்துக் கொள்ளும் இந்தக் காலத்து குழந்தைகளுக்கு நடைப்பயிற்சியும் கொடுத்த மாதிரி இருக்கும். எளிமையாகவும், சிக்கனமாகவும் வாழ்பவர்களின் உள்ளங்கள் என்றும் ஆடம்பரத்தை விரும்பா. பேசும் வார்த்தைகளிலும் சிக்கனத்தைக் காட்டினால் நம் ஆற்றல் பெருகும், சக்தி மிச்சமாகும்.



* * *

659

ஆகஸ்ட் 2017

நேரம்—– 45 நிமிடங்கள்
(பெரும மதிப்பெண்கள்: 100)

[குறிப்பு:– ஒவ்வொரு வினாவையும் தனித் தனித் தாளில் ஏதாவது ஒரு புறம் மட்டும் தட்டச்சு செய்க. எழுத்துப் பிழைகளைத் திருத்தம் செய்து, ஒழுங்காகவும் அழகாகவும் சொற் சுருக்கங்களை விரிவுபடுத்தியும் சரியான முறையில் தட்டச்சு செய்ய வேண்டும். தேவையான இடங்களில் எண்களுக்கு நிறுத்தக் குறிகள் இடவும்.]

வினா எண்.1 ] [ மதிப்பெண்கள்: 50

கீழ்க்கண்ட புள்ளி விவரப்பட்டியை உரிய முறையில் தட்டச்சு செய்து கோடிடுக:-

2001 ஜனத்தொகைக் கணக்கெடுப்பு

| மாவட்டங்கள் | கிராமப்புறம் ஆண்கள் | நகர்ப்புறம் பெண்கள் | கிராமப்புறம் ஆண்கள் | நகர்ப்புறம் பெண்கள் |
|---|---|---|---|---|
| கடலூர் | 629,052 | 625,622 | 761,355 | 731,727 |
| திருவள்ளூர் | 771,886 | 759,248 | 379,122 | 375,239 |
| வேலூர் | 1,088,090 | 1,081,229 | 652,993 | 655,004 |
| திருவண்ணாமலை | 895,738 | 889,626 | 200,640 | 200,121 |
| சேலம் | 852,453 | 773,709 | 711,180 | 679,004 |
| நாமக்கல் | 1,240,122 | 465,865 | 277,186 | 268,046 |
| தருமபுரி | 482,365 | 1,160,282 | 233,475 | 223,471 |

[திருப்புக....

JUNIOR
I Batch



வினா எண்.2 ] [ மதிப்பெண்கள்: 50

கீழ்க்கண்ட <u>தொழில் முறைக்</u> கடிதத்தை உரிய முறையில் தட்டச்சு செய்க:–

எஸ். விஜயலக்ஷ்மி, ஏ.சி.ஏ.,
பட்டயக் கணக்கர்.

தொலைபேசி: 2534761
4 கணபதி தெரு,
டி.வி.எஸ். நகர்,
மதுரை 625 003.
15 பிப். 2017.

திருவாளர்கள் ராஜன் சகோதரர்கள்,
பொறியியல் ஒப்பந்ததாரர்கள்,
215 மேல வெளி வீதி,
மதுரை 625 001.

ஐயன்மீர்,

சென்ற ஆண்டிற்கான தங்களது கணக்குகளைப் பரிசீலிக்கிறபோது எனக்கு சில ஐயங்கள் எழுந்து என் வேலையைத் தொடர முடியாமல் செய்துள்ளன. அவைகள் சம்பந்தமாக எனக்கு விளக்கம் அளிக்கத் தக்க அனுபவம் வாய்ந்த தங்கள் அலுவலர் ஒருவரை அனுப்பி வைத்தால் நலமாக இருக்கும். அப்படி அனுப்பப்பட்ட தங்கள் அலுவலர் என்றைக்கு வர முடியும் என்பதை எனக்கு முன்னரே அறிவித்தால், அன்றைய நாளில் நான் அலுவலகத்தில் இருப்பதை உறுதி செய்து கொள்ள இயலும். * வருமான வரி சம்பந்தப்பட்ட கணக்குகளை உரிய நேரத்தில் கொடுக்க வேண்டியிருப்பதால் தங்களது பதிலை விரைவாக அனுப்பி வைத்தால் உபயோககரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

த. உ.,

(எஸ். விஜயலக்ஷ்மி)

* * *

JUNIOR

II BATCH

# 491

## ஆகஸ்ட் 2017

நேரம்- பத்து நிமிடங்கள்
(பெரும மதிப்பெண்கள்:100)

*கீழ்கண்டவற்றை இரட்டை வரி இடைவெளியில், பத்து டிகிரி இடது ஓரம் விட்டு, தட்டச்சு செய்க. (பிழையின்றியும், அழகுறவும் தட்டச்சு செய்வதில் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும்):-*

இன்று கணினியும், செல்லிடப்பேசியும் நமது அன்றாட வாழ்க்கையின் இன்றியமையாத கருவிகளாகி விட்டன. இந்தக் கருவிகள் நமக்கு அறிமுகமான நேரத்தில் தமிழுக்கு இனிமேல் மதிப்பில்லை என்னும் வசைமொழியே உரத்து ஒலித்தது. ஆனால், இன்றைய நிலையே வேறு. கணினிகளை விடவும் எல்லாச் செல்லிடப்பேசிகளிலும் வட்டார மொழித் தட்டச்சுப் பொறி செயல்பாட்டில் இருக்கிறது. தூய தமிழில் அழகான சொற்களால் குறுஞ்செய்தியை அனுப்புகிற மக்கள் கூட்டம் மிகுந்திருப்பது தமிழ் மொழி வளர்ச்சியின் இன்னொரு அடையாளம். எழுதும்போது நேர்ந்த எழுத்துப் பிழைகளைத் திருத்துவதற்கு செல்லிடப்பேசியில் பிழைதிருத்தியும் தானியங்கிச் சொற்பதிவும் வசதியாக இடம் பெற்றிருக்கின்றன.

பிறமொழிச் சொற்களைக் கையாளப் புகுமுன்னர் அதற்கு இணையான தமிழ்ச் சொல்லைத் தேடுவதற்குரிய மொழிமாற்றியையும் அவர்கள் உடனே பயன்படுத்தத் தொடங்குகிறார்கள். புதிய சொற்களை அறிந்து கொள்ளுகிறார்கள், பயன்பாட்டுக்கும் கொண்டு வருகிறார்கள். குறுஞ்செய்திகளில் மட்டுமின்றி, முகநூல், கட்செவி அஞ்சல் முதலிய சமூக வலைதளங்களிலும் தமிழில் பரப்பப்படுகிற பரப்புரை வியக்க வைக்கிறது. அவர்கள் பயன்படுத்துகிற சொல்லாடல்களும், மேற்கோள்களும் சங்க இலக்கியங் களிலிருந்து தொடங்கி சமகால இலக்கியங்கள் வரைக்கும் தொட்டுச் செல்கின்றன. இலக்கணங்கள் பேசுகின்றன. மொழி பெயர்ப்புத் தருகின்றன. விவாதங்களை முன்னெடுக்கின்றன. நயமான மறுப்புகளையும் விமர்சனங்களையும் முன்வைக்கின்றன. பேசுகிறபோது பிறமொழிக் கலப்பில்லாமல் பேச இயலாதவர்களும் கூட செல்லிடப்பேசியின் வாயிலாக, குறுஞ்செய்தியிலும் முகநூலிலும் கட்செவி அஞ்சலிலும் இலக்கணப் பிழையில்லாத தமிழைப் பகிர்வது வியப்பினை உருவாக்குகிறது. இந்த ஐந்து ஆண்டுகளில் செல்லிடப்பேசியைப் பயன்படுத்துகிறவர்கள் நகர்ப்புறம் மட்டுமில்லாமல் கிராமங்களிலும் அதிகரித்திருக்கிறார்கள்.



* * *

JUNIOR

II BATCH

# 611

ஆகஸ்ட் 2017

நேரம்— 45 நிமிடங்கள்
(பெரும மதிப்பெண்கள்: 100)

[குறிப்பு:– ஒவ்வொரு வினாவையும் தனித் தனித் தாளில் ஏதாவது ஒரு புறம் மட்டும் தட்டச்சு செய்க. எழுத்துப் பிழைகளைத் திருத்தம் செய்து, ஒழுங்காகவும் அழகாகவும் சொற் சுருக்கங்களை விரிவுபடுத்தியும் சரியான முறையில் தட்டச்சு செய்ய வேண்டும். தேவையான இடங்களில் எண்களுக்கு நிறுத்தக் குறிகள் இடவும்.]

வினா எண்.1] [ மதிப்பெண்கள்: 50

கீழ்க்கண்ட புள்ளி விவரப்பட்டியை உரிய முறையில் தட்டச்சு செய்து கோடிடுக:-

பொதுக் கல்விக்கான பள்ளிகள் – 2002-2003

| நிறுவனம் ~~வகை~~ | பள்ளிகள் | மாணவர்கள் | மாணவிகள் | ஆசிரியர்கள் |
|---|---|---|---|---|
| ஆரம்பப் பள்ளிகள் | 6,383 | 20,93,568 | 19,89,289 | 1,20,524 |
| நடுநிலைப் பள்ளிகள் | 31,678 | 11,22,501 | 10,95,169 | 59,680 |
| மாநில உயர்நிலைப் பள்ளிகள் | 2,905 | 6,57,182 | 7,22,841 | 33,439 |
| மற்ற ~~ஆங்கிலோ-இந்திய~~ உயர்நிலைப் பள்ளிகள் | 12 | 7,686 | 2,817 | 272 |
| மாநில மேல்நிலைப் பள்ளிகள் | 2,602 | 17,08,401 | 15,53,817 | 81,954 |
| மற்ற ~~ஆங்கிலோ-இந்திய~~ மேல்நிலைப் பள்ளிகள் | 129 | 21,195 | 21,568 | 1,211 |

[திருப்புக....

II Batch Junior



வினா எண்.2 ]

கீழ்க்கண்ட அரசு ஆணையை உரிய முறையில் தட்டச்சு செய்யவும்:- [ மதிப்பெண்கள்: 50

த. நா. அரசு

சுருக்கம்

கொத்தடிமை ஒழிப்பு – விழிப்புணர்ச்சி நடத்துதல் இயக்கம் – செலவினம் ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதி திராவிடர் நலத் துறை

அரசு ஆணை எண் 141 நாள் 24 டிச. 1996.

படிக்கப்பெற்றது:

அரசு ஆணை எண் 128, ஆதி திராவிடர் நலத்துறை, நாள் 18 மார்ச் ~~1993~~.

— — —

ஆணை:

கொத்தடிமை முறை ஒழிப்புச் சட்டம் மற்றும் மறு வாழ்வுத் திட்டங்கள் குறித்து தொழிலாளர்கள், மற்றும் கிராம மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு /இயக்க கருதுகிறது. எனவே ஆதி திராவிடர் நல இயக்குநர் நகரத்தில் விளம்பரம் கொடுப்பது மற்றும் கூட்டம் நடத்துவது ஆகிய பணிகளுக்காக ரூபாய் பத்து இலட்சம் அனுமதித்து அரசு ஆணை வெளியிடப்படுகிறது. 2. இதற்கான திட்டம் முன்னரே திட்ட அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆ. ஆ. ப)

இரா. கிருஷ்ணன்,
அ. செ.

பெறுநர்
ஆதி திராவிடர் நல இயக்குநர், சென்னை 600 005.

ஆணைப்படி அனுப்பப்படுகிறது

பிரிவு அலுவலர்.

* * *

# 403

## ஆகஸ்ட் 2017

நேரம்- பத்து நிமிடங்கள்
(பெரும மதிப்பெண்கள்:100)

*கீழ்கண்டவற்றை இரட்டை வரி இடைவெளியில், பத்து டிகிரி இடது ஓரம் விட்டு, தட்டச்சு செய்க. (பிழையின்றியும், அழகுறவும் தட்டச்சு செய்வதில் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும்):-*

கொசுக்கடி தானே என்ற அறியாமையாலும், வசதிக் குறைவாலும் உரிய முன்னேற்பாடுகளைச் செய்யாமல் பெருவாரியான மக்கள் அவதிப்படுகிறார்கள். வாழ்நாள் முழுவதும் உழைக்க வேண்டியுள்ள தொழிலாளர்கள் தங்களுக்கு வரும் நோய்களால் மருத்துவமனைகளுக்கு அலையும் நிலை அதிகரித்து உள்ளது. கொசுக்களை விரட்ட பெரும்பாலும் கொசுவர்த்திச் சுருள், பிற வகையான கொசு விரட்டிகளின் பயன்பாடே அதிக அளவிலுள்ளது. சிலருக்கு அவற்றிலிருந்து வரும் புகை ஒத்துக் கொள்வதில்லை. ஆஸ்துமா, மூச்சிறைப்பு, புற்றுநோய் உள்ளிட்ட நோய்களுக்கும் கொசுவர்த்திகள் வித்திடுகின்றன என்கிறார்கள் மருத்துவர்கள். கொசுவர்த்தி எரியும்போது உணவுகளை மூடி வைக்க வேண்டும். இல்லையெனில் உணவில் ரசாயனம் சேர்ந்து உடல்நலக் கோளாறு ஏற்படும். ஒரு காலத்தில் இத்தகைய விரட்டிகளைக் கண்டு தலைதெறித்தோடிய கொசுப்படைகள், தற்போது அவற்றை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் இரத்தத்தை உறிஞ்சுகின்றன. எனவே கொசுக்கள் உருவாகும்போதே அவற்றை அழிக்க கொசுப் புழுக்களை மட்டுமே உண்டு வாழும் மீன்களை கிணறுகள், நீர்நிலைகளில் விட்டார்கள். ஆனால், இவ்வகையான தாக்குதல்களை எல்லாம் தாங்கும் சக்தியை வளர்த்துக் கொண்டுள்ளன நவீன காலக் கொசுக்கள். கொசுவை விரட்ட ரசாயன விரட்டிகளைத் தவிர்க்க விரும்புவோர் இயற்கை முறையில் விரட்டும் வழிகளை முயன்று பார்க்கலாம். வீட்டின் சன்னல்களில் கொசு நுழையாத அளவுக்கு கம்பி வலைகளை அமைக்கலாம். கொசுக்கள் படையெடுக்கும் மாலை நேரங்களில் கதவுகளை மூடி வைத்தாலே பெரும்பாலான கொசுக்களைத் தவிர்க்கலாம். கொசுவலைப் பயன்பாடு நல்ல பலனைத் தரும். காய்ந்த வேப்பஞ்சருகுகளைக் கொண்டு தீ மூட்டி அந்தப் புகையால் கொசுக்களை விரட்டலாம்.

கொசுக்களின் வாழ்விடங்களான கிணறுகள், மூடப்படாத தண்ணீர்த் தொட்டிகள், தண்ணீர் தேங்குமிடங்கள், சாக்கடைகள் ஆகிய பகுதிகளின் தூய்மையை கவனமாகப் பராமரிக்க வேண்டும்.

* * *

JUNIOR
III Batch

# 643

**ஆகஸ்ட் 2017**

நேரம்—45 நிமிடங்கள்
(பெரும மதிப்பெண்கள்: 100)

[குறிப்பு:— ஒவ்வொரு வினாவையும் தனித் தனித் தாளில் ஏதாவது ஒரு புறம் மட்டும் தட்டச்சு செய்க. எழுத்துப் பிழைகளைத் திருத்தம் செய்து, ஒழுங்காகவும் அழகாகவும் சொற் சுருக்கங்களை விரிவுபடுத்தியும் சரியான முறையில் தட்டச்சு செய்ய வேண்டும். தேவையான இடங்களில் எண்களுக்கு நிறுத்தக் குறிகள் இடவும். ]

வினா எண்.1 ] [ மதிப்பெண்கள்: 50

கீழ்க்கண்ட புள்ளி விவரப்பட்டியை உரிய முறையில் தட்டச்சு செய்து கோடிடுக:-

பத்திரிகைகள், மருத்துவர்கள் விகிதம்
(மாவட்ட வாரியாக—2002-03)

| மாவட்டங்கள் | பத்திரிகைகள் | சராசரி மக்கள் தொகை | மருத்துவர்கள் | சராசரி மக்கள் தொகை |
|---|---|---|---|---|
| சென்னை | 1,09,999 | 383 | 1,804 | 6,537 |
| காஞ்சிபுரம் | 2,735 | 1,049 | 439 | 2,337 |
| திருவள்ளூர் | 594 | 1,853 | 183 | 14,966 |
| விழுப்புரம் | 1,231 | 4,611 | 191 | 11,948 |
| கடலூர் | 1,074 | 2,741 | 231 | 12,744 |
| வேலூர் | 2,023 | 1,722 | 294 | 11,847 |
| திருவண்ணாமலை | 971 | 2,247 | 182 | 11,988 |
| திருச்சிராப்பள்ளி | 1,488 | 1,606 | 358 | 6,673 |

[திருப்புக....

JUNIOR III Batch.



வினா எண்.2 ] [ மதிப்பெண்கள்: 50

கீழ்க்கண்ட வணிக முறைக் கடிதத்தை உரிய முறையில் தட்டச்சு செய்க:–

இராமகிருஷ்ணா ஏஜென்சீஸ்
(மின்சார சாதனங்கள் விற்பனையாளர்)

தொலைபேசி: 24412231

அ.பெ. எண். 2711,
21 லஸ் சர்ச் வீதி,
மயிலாப்பூர்,
சென்னை 600 004.
24 மார்ச் 2017.

கடித எண் 72/17

திருவாளர்கள் சமதி எலக்ட்ரிகல்ஸ்,
77 திருப்பரங்குன்றம் சாலை,
மதுரை 625 003.

அன்புடையீர்,

மார்ச் 10ம் தேதியிட்ட கடிதமும் தங்களது ஆர்டரும் வந்து சேர்ந்தன. தங்களுக்குத் தேவையான சரக்குகளை ஒரு மாத காலத்திற்குள் அனுப்பித்தர இயலும் என்று நம்புகிறோம். எங்களது சரக்குகளின் உயர்ந்த தரம் குறித்து தங்களுக்கு திருப்தி இருக்கும். சரக்குகள் தங்களுக்கு வந்து சேர்ந்தவுடன் அவற்றின் விலைத்தொகையை அனுப்பி வைக்கவும். வழக்கம் போலவே குறித்த நேரத்தில் பணம் அனுப்பி வைத்தால் பட்டியல் தொகையில் பத்து சதவிகிதம் கழிவு அளிக்கிறோம். ஏற்கனவே உள்ள பழைய பாக்கியைத் தீர்க்க ஏற்பாடு செய்யவும். தொடர்ந்து தங்கள் ஆதரவை எதிர்பார்க்கிறோம்.

த.உ.,
இராம---- ஏஜென்சிக்காக,

(கே. இராஜேந்திரன்)
மேலாளர்.



* * *

JUNIOR. IV Batch.

## ஆகஸ்ட் 2017

நேரம்- பத்து நிமிடங்கள்
(பெரும மதிப்பெண்கள்:100)

*கீழ்கண்டவற்றை இரட்டை வரி இடைவெளியில், பத்து டிகிரி இடது ஓரம் விட்டு, தட்டச்சு செய்க. (பிழையின்றியும், அழகுறவும் தட்டச்சு செய்வதில் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும்):-*

சுயநலமில்லாமல், பொது நலத்துடன் போராடிய தலைவர்கள் எழுதிய புத்தகங்களை வாசிக்க வேண்டும். இதனால், மாணவர்களுக்கு நாட்டுப் பற்று அதிகரித்து, அத்தலைவர்களின் வாழ்க்கை வரலாறு மாணவர்களின் எதிர்காலத்தைச் செம்மைப்படுத்த உதவும். அதுபோலவே சமயத் தலைவர்களின் விடுமுறை நாள்களின்போது அவர்கள் எடுத்துரைத்த அரிய உண்மைகளையும், அவர்கள் வாழ்வில் நடந்த சீரிய நிகழ்ச்சிகளையும் சிறந்த கொள்கைகளையும் அறிந்து கொள்ளும் வகையில் மாணவர்களுக்குப் பாடங்களைப் போதிக்க வேண்டும். கடமையைச் செய், பலனை எதிர்பாராதே என்று இந்து மதம் கூறியுள்ளதையும், அரசாளப் பிறந்த சித்தார்த்தன் எவ்வாறு புத்தன் ஆனார் என்பது குறித்தும், அவரது போதனைகளில் தலையாயதான ஆசையே எல்லாத் துயரத்திற்கும் காரணம் என்பதையும் மாணவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். விடுமுறை நாட்களை பயனுள்ளதாக்க மாணவர்களிடம் இவற்றை எடுத்துரைத்தால் இளமையிலேயே மாணவர்களிடையே சமய நல்லிணக்கம் வளர்வதுடன், வேற்றுமையில் ஒற்றுமையுடன் வாழப் பழகுவார்கள்.

இதனால் மாணவர்களிடையே கல்வி அறிவுடன், ஒழுக்க சிந்தனையும் ஒருங்கே வளர்வதால் எதிர்காலத்தில், சாதி, சமய பேதமற்ற சமுதாயத்தை நம்மால் உருவாக்க முடியும். விடுமுறை நாட்களில் மாணவர்களின் எண்ணங்கள் நல்வழி காண மடை மாற்றம் செய்யப்பட வேண்டும். அதற்கு ஒரே வழி பள்ளிகளில் அவ்வப்போது விடப்படும் தேவையற்ற விடுமுறைகளை விலக்குவதுதான். காலத்தை வீணாக்குவது என்பது வாழ்வையே வீணடிப்பது என்பதை மாணவர்கள் உணர வேண்டும். காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது. உலகில் உள்ள அரியவற்றில் எல்லாம் தலையாயது நேரம். அதனை விலை கொடுத்து வாங்க முடியாது. எனவே, மாணவர்கள் விடுமுறை நாட்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும். அதற்கு பெற்றோரும், ஆசிரியர்களும் உற்ற துணையாக இருக்க வேண்டும். தியாகிகளைப் பற்றி பள்ளியில் வகுப்பு எடுக்க வேண்டும்.



* * *

IV Batch Junior

# 688

ஆகஸ்ட் 2017

நேரம்—45 நிமிடங்கள்
(பெரும மதிப்பெண்கள்: 100)

[குறிப்பு:— ஒவ்வொரு வினாவையும் தனித் தனித் தாளில் ஏதாவது ஒரு புறம் மட்டும் தட்டச்சு செய்க. எழுத்துப் பிழைகளைத் திருத்தம் செய்து, ஒழுங்காகவும் அழகாகவும் சொற் சுருக்கங்களை விரிவுபடுத்தியும் சரியான முறையில் தட்டச்சு செய்ய வேண்டும். தேவையான இடங்களில் எண்களுக்கு நிறுத்தக் குறிகள் இடவும்.]

வினா எண்.1] [ மதிப்பெண்கள்: 50

கீழ்க்கண்ட புள்ளி விவரப்பட்டியை உரிய முறையில் தட்டச்சு செய்து கோடிடுக:-

தமிழ் நாட்டில் போக்குவரத்து அபிவிருத்தி

| | ஆண்டுகள் | தேசிய நெடுஞ்சாலைகள் | மாநில நெடுஞ்சாலை | வணிக முறை | வணிக முறை அல்லாதது | |
|---|---|---|---|---|---|---|
| ஜி. | | (கிலோ மீட்டரில்) | | | | |
| 4L | 1995-96 | 2,003 | 54,972 | 24,88,442 | 2,83,404 | மா. |
| | 1996-97 | 2,003 | 53,417 | 3,09,817 | ~~28,72,002~~ | இடைக் |
| மா. | 1998-99 | 3,773 | 56,822 | 3,44,244 | 32,70,004 | L5 |
| மா. | 1997-98 | 2,582 | 56,391 | 3,68,922 | 37,01,812 | |
| | 1999-2000 | 3,789 | 55,352 | 3,99,300 | 42,07,921 | L7 |
| | 2000-2001 | 3,865 | 55,397 | 4,21,365 | 47,40,718 | L7 |
| இடைக் | 2001-2002 | ~~3,850~~ | 55,488 | 4,32,306 | 52,25,991 | |

[திருப்புக....

IV Batch. JUNIOR.

வினா எண்.2 ]

கீழ்கண்ட **வணிக முறைக்** கடிதத்தை உரிய முறையில் தட்டச்சு செய்க:- [ மதிப்பெண்கள்: 50

இராமன் சகோதரர்கள்
(பல் பொருள் விற்பனையாளர்)

தொ.பே.: 24712198

அ.பெ. எண் 42,
148 அண்ணா சாலை,
சென்னை 600 002.

21 பிப். 2017. /2

3/ கடித எண் 77/17

திருவாளர்கள் ஜான் கம்பெனியார்,
180 அவினாசி சாலை,
கோயம்புத்தூர் 641 018.

அன்புடையீர்,

நாங்கள் கடிதம் மூலம் கேட்டுக் கொண்டபடி ஐம்பது காற்சாடிகளை அனுப்பி வைத்ததற்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அனுப்பிய சரக்குகளின் பாதிக்கு மேற்பட்டவை பழுதாகி விற்பனைக்கு தகுந்ததாக இல்லை. இது வழியில் சரியான முறையில் கையாளாததால் ஏற்பட்டிருக்கக் கூடும். சரக்கு உந்து நிறுவனத்தின் மீது நாம் எடுக்கக் கூடிய நடவடிக்கை ஒரு பக்கம் இருக்க, உடனே பதில் சரக்குகளை அனுப்பி வைத்தால், வாடிக்கையாளர்களின் தேவையைத் தாமதமின்றிப் பூர்த்தி செய்ய இயலும் என்பதைக் கருத்தில் கொண்டு தக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம்.

த.உ.,
இராமன் - - - - - - க்காக,

(வ. ரங்கராஜன்)
மேலாளர்.

* * *

JUNIOR
V Batch.

# 449

## ஆகஸ்ட் 2017

நேரம்- பத்து நிமிடங்கள்
(பெரும மதிப்பெண்கள்:100)

*கீழ்கண்டவற்றை இரட்டை வரி இடைவெளியில், பத்து டிகிரி இடது ஓரம் விட்டு, தட்டச்சு செய்க. (பிழையின்றியும், அழகுறவும் தட்டச்சு செய்வதில் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும்):-*

நாட்டுக்காகவும், சமூகத்துக் காகவும் உழைத்த தலைவர்களின் பிறந்த நாள் மற்றும் நினைவு நாள் ஆகியவற்றுக்காக பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்படுவது சிறிதும் தேவையற்றது. ஏனெனில், பல மாணவர்களுக்கு பள்ளிக்கு விடுமுறை அளிக்கப்பட்டது ஏன் என்பது கூடத் தெரியவில்லை. எனவே, தலைவர்களின் பிறந்தநாள் மற்றும் நினைவு நாள்களில், பள்ளிகளில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தி அத்தலைவர்களைப் பற்றி மாணவர்களிடம் தெரிவிக்க வேண்டும். அதனால், இனி தலைவர்களின் பிறந்த நாள்கள் மற்றும் நினைவு நாள்கள் ஆகியவற்றுக்கு விடுமுறை கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக நம் நாட்டுப் பள்ளிக்கூடங்களில் வருடத்திற்கு 220 நாட்களாவது வேலை நாட்களாக இருக்க வேண்டும் என்பது விதி. ஆனால், பல பள்ளிகள் இந்த விதிமுறையைப் பின்பற்றுவது கிடையாது.

சமீப காலமாகப் பள்ளிகள் பல்வேறு காரணங்களைக் காட்டி, பல சந்தர்ப்பங்களில் விடுமுறைகளை அறிவித்து விடுகின்றன. இந்தச் சிறப்பு விடுமுறை நாட்களில் பள்ளி மாணவர்கள் வீட்டில் தங்குவதில்லை. வெளியே நண்பர்களுடன் அரட்டையடிப்பதிலும், தொலைக்காட்சியிலும், கணினியிலும், செல்லிடப்பேசியிலும் திரைப்படங்களைக் கண்டு களிப்பதிலும் தங்கள் பொன்னான நேரத்தை வீணடிக்கிறார்கள். இந்த நண்பர்களுடனான சந்திப்பு பல நேரங்களில் சண்டை சச்சரவுகளில் தான் முடிகிறது. இதனால் வீட்டிலும் பிரச்னை, வெளியிலும் பிரச்னை. மேலும் இந்த நாட்களில் திரை அரங்குகளில் கூட்டம் நிரம்பி வழிகிறது. விடுமுறை எந்த நோக்கத்திற்காக விடப்படுகிறது என்று மாணவர்களுக்குத் தெரியவில்லை. எனவேதான், எந்தவிதப் பயனுமில்லாமல் மாணவர்கள் தேவையற்ற வகையில் பொழுதைக் கழிப்பதற்காகவே விடப்படும் விடுமுறை தேவையில்லை. மாணவர்கள், இனி முக்கியத் தலைவர்கள் பிறந்த நாள் மற்றும் நினைவு நாளின் போது அவர்களை நினைவு கூர்ந்து அவர்களைப் பற்றிய நல்ல விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.



* * *

JUNIOR
V Batch

# 694

ஆகஸ்ட் 2017

நேரம்—– 45 நிமிடங்கள்
(பெரும மதிப்பெண்கள்: 100)

[குறிப்பு:– ஒவ்வொரு வினாவையும் தனித் தனித் தாளில் ஏதாவது ஒரு புறம் மட்டும் தட்டச்சு செய்க. எழுத்துப் பிழைகளைத் திருத்தம் செய்து, ஒழுங்காகவும் அழகாகவும் சொற் சுருக்கங்களை விரிவுபடுத்தியும் சரியான முறையில் தட்டச்சு செய்ய வேண்டும். தேவையான இடங்களில் எண்களுக்கு நிறுத்தக் குறிகள் இடவும்.]

வினா எண்.1 ] [ மதிப்பெண்கள்: 50

கீழ்க்கண்ட புள்ளி விவரப்பட்டியை உரிய முறையில் தட்டச்சு செய்து கோடிடுக:-

தலைப்பு | மாவட்ட வாரியாக பயிரிடப்பட்ட பரப்பளவு

| | மாவட்டம் | அரசு கால்வாய் | குளங்கள் | குழாய்க் கிணறுகள் | மற்ற கிணறுகள் | |
|---|---|---|---|---|---|---|
| | | (ஹெக்டேரில்) | | | | |
| 5L | கடலூர் | 48,654 | 5,243 | 87,223 | 8,192 | L3 |
| | வேலூர் | 11,528 | 4,848 | 682 | 88,534 | |
| 9L | நாமக்கல் | 13,486 | 2,230 | 800 | 42,540 | L5 |
| | ஈ.ரோடு | 46,357 | 158 | 75 | 83,302 | |
| மா. | கோயம்புத்தூர் | 65,809 | 1,755 | 8,493 | 116,865 | |
| | திருச்சிராப்பள்ளி | 44,728 | 4,946 | 625 | 44,054 | /மா |
| | கரூர் | 20,196 | 1,336 | 4,118 | 23,945 | |
| இருக்க | ~~மொத்தம்~~ | 152,746 | 8,003 | 9,221 | 1,130 | |

[திருப்புக....

வினா எண்.2 ]  [ மதிப்பெண்கள்: 50

கீழ்க்கண்ட <u>தொழில் முறைக்</u> கடிதத்தை உரிய முறையில் தட்டச்சு செய்க:–

கே. ராஜேஸ்வரன், எம்.எல்.,
வழக்கறிஞர்.

தொலைபேசி: 2253745
46 தென்னமரம் தெரு
வேலூர் 632 001.
12 ஜன. 2017. / மார்ச்

திரு. என். கே. மூர்த்தி,
3/5 காந்தி சாலை,
வேலூர் 632 001.

ஐயா,

போன மாதம் 5ம் தேதியிட்ட தங்கள் கடிதத்தின் மூலமாக தங்கள் கஷ்டங்களை எடுத்துக் கூறி ~~சிவா~~ /கிருஷ்ணா நீங்கள் எனது கட்சிக்காரர் திரு. ஆர். ~~[illegible]~~ வாங்கிய கடன் தொகை ரூ. 50,000/= (ரூபாய் ஐம்பதாயிரம்) மட்டுமேத்தைத் திருப்பித் தர இப்போது இயலாது என்றும் மாதத்தில் கடன் கேட்டுள்ளீர்கள். 2016 ஜூலை மாதத்தில் இந்த தொகையைப் பெற்றுக் கொண்ட நேரத்தில் இது மாதங்களுக்குள் அதனை வட்டியுடன் சேர்த்துத் ~~[illegible]~~ திருப்பிக் கொடுப்பதாக எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். நீ/

வாங்கிய கடனைக் குறித்த நேரத்தில் திருப்பிக் கொடுக்கத் தவறிய நீங்கள் ஒரு மாத காலத்திற்குள் கடனைத் தீர்க்காவிட்டால், எனது கட்சிக்காரர் வழக்கு மன்றம் மூலம் ~~[illegible]~~ / நீதி நடவடிக்கை எடுக்க நேரிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ப்/ எனது/

த. உ.,

(கே. ராஜேஸ்வரன்)



* * *